**IN THE COURT OF THE PRINCIPAL SUB JUDGE, KARUR**

| | |
|---|---|
| அசல் வழக்கு எண் | 97/2017 |
| நாள் | 27.11.2024 |
| பி.சா.1 | மாணிக்கம் |
| வயது | 62 |
| ஊர் | பிச்சாம்பட்டி |

சாட்சி மீண்டும் நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு வாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக அனுமதி வழங்கப்பட்டது.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

வாதி சந்தோஷ் என்பவரை நான் பார்த்ததில்லை. நீதிமன்றத்திற்கு வந்த பின்பு தான் அவரை பார்த்தேன். இவ்வழக்கிற்கு இந்த நீதிமன்றத்திற்கு வந்த போது தான் நான் வாதி சந்தோஷ் என்பவரை பார்த்தேன். அதற்கு முன்பாக வாதியை நான் பார்த்ததில்லை. நான் வாதியிடம் தாவா சொத்தை கிரயம் செய்து கொடுப்பதாக ஒப்புக்கொண்டு பெற்ற கிரய முன் தொகையை ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கத்திற்காக வாதியை எனக்கு தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதிக்கு தாவா சொத்தை கிரயம் செய்து கொடுப்பதாக ஒப்புக்கொண்டு தாவா கிரய உடன்படிக்கையை நான் கையொப்பமிட்டு வாதிக்கு ஏற்படுத்தி கொடுத்தேன் என்றால் சரியல்ல. அவ்வாறு ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் பேரில் ரூ.4,01,000/– ஐ நான் வாதியிடம் இருந்து முன்பணமாக பெற்றுக்கொண்டேன் என்றால் சரியல்ல. வ.த.சா.ஆ.1 கிரய உடன்படிக்கையை நான் பார்த்ததில்லை. நான் நீதிமன்றத்திற்கு வந்த பின்னிட்டும் வா.த.சா.ஆ1 கிரய உடன்படிக்கையை பார்க்கவில்லை. நான் பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள ஆறுமுகம், செந்தில்குமார் ஆகியோர் என்னுடைய நண்பர்களா என்றால் ஆறுமுகம் மட்டுமே என்னுடைய நண்பர். செந்தில்குமார் என்பவருடன் எனக்கு பழக்கம் இல்லை. செந்தில்குமார் என்பவரை நான் பார்த்துள்ளேன். ஆறுமுகம் என்பவரின் வீட்டிற்கு பக்கத்தில்

தான் செந்தில்குமார் குடியிருந்து வருகிறார். அவர் என்ன தொழில் செய்து வருகிறார் என்று எனக்கு தெரியாது. செந்தில்குமார் என்பவருக்கும் எனக்கும் இடையே எவ்வித பிரச்சனையும் இல்லை. ஆறுமுகம் என்பவருக்கும்,எனக்கம் இடையே எவ்வித பிரச்சனையும் இல்லை. நான் வெற்றுத்தாளில் கையொப்பமிட்டு கொடுத்ததை வாதி கிரயஉடன்படிக்கை ஆவணமாக தயார் செய்து கொண்டார் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் ஒரு பச்சைத்தாளிலும், ஒரு வெள்ளைத்தாளிலும் கையொப்பம் செய்து கொடுத்தேன். அதை பயன்படுத்தி தான் வ.த.சா.ஆ.1 கிரய உடன்படிக்கை ஆவணம் தயார் செய்யப்பட்டதாக சொல்கிறீர்களா என்றால் ஆமாம். நான் ஆறுமுகம் என்பவரிடம் தான் மேற்படி வெற்றுத்தாள்களில் கையொப்பம் மட்டும் செய்து கொடுத்தேன். நான் வெற்றுத்தாளில் கையொப்பம் மட்டும் செய்து கொடுத்ததாக கூறுவது முற்றிலும் பொய் என்றால் சரியல்ல. எனக்கு வேறு சொத்துக்கள் உள்ளதா என்றால் உள்ளது. அந்த சொத்துக்களுக்கும் ஆறுமுகம் என்பவர்தான் பட்டாவில் பெயர் மாற்றம் செய்து கொடுத்தார். ஆறுமுகம் என்பவர் ஒருபோதும் எனக்காக பட்டாவில் பெயர் மாற்றம் செய்யும் வேலையை செய்யவில்லை என்றால சரியல்ல. தாவா கிரய உடன்படிக்கையில் கண்டுள்ள சாட்சிகள் முன்னிலையில் கிரய முன் தொகையை பெற்றுக்கொண்டு தான் வ.த.சா.ஆ–1 கிரய உடன்படிக்கை ஆவணத்தை வாதியின் பெயருக்கு எழுதிக்கொடுத்தேன் என்றால் சரியல்ல. வாதி பலமுறை தாவா சொத்தை கிரயம் செய்து கொடுக்கும்படி என்னை கேட்டார் என்றால் சரியல்ல. நான் வாதி பலமுறை என்னை அனுகி வ.த.சா.ஆ.1 கிரய உடன்படிக்கையின் படி கிரய ஆவணம் எழுதி பெறுவதற்கு என்னை கேட்டும் நான் தான் கிரய ஆவணம் எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. வாதியிடம் வாங்கிய கிரய முன் தொகையை ஏமாற்ற வேண்டும் என்பதற்காகத்தான் தாவா சொத்தை பொறுத்து 2 வது பிரதிவாதி ரவிசங்கர் லோகியா என்பவர் பெயரில் கிரய ஆவணம் எழுதிக்கொடுத்தேன் என்றால் சரியல்ல. 2 வது பிரதிவாதியின் பெயரில் ஏற்பட்ட கிரய ஆவணம் மோசடியானது என்றும், அது முறையாக

அமல்படுத்தப்படவில்லை என்றால் சரியல்ல. தாவா கிரய உடன்படிக்கை கண்டுள்ள கிரய முன் தொகையை வட்டியுடன் வாதிக்கு செலுத்த நான் கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. தாவா தொகைக்கு தாவா சொத்தை பொறுத்து பற்றுகை பாக்கியம் உள்ளது என்றால் சரியல்ல. தாவா கிரய உடன்படிக்கையை பொறுத்து நான் குறிப்பிட்ட ஆட்சேபணைகள் அனைத்தும் முற்றிலும் பொய்யானது என்றால் சரியல்ல. கணேசன் என்பவரின் சகோதரிகள் தாவா சொத்து மற்றும் இதர சொத்துக்களை பொறுத்து வழக்கு தாக்கல் செய்திருப்பதாக என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில்குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அவ்வழக்கின் வாதிகளும், நானும் கூட்டாக சேர்ந்து கொண்டு வாதிக்கு கொடுக்க வேண்டிய தொகைய தவிர்க்கும் பொருட்டு பொய்யாக தாக்கல் செய்தோம் என்றால் சரியல்ல. வாதிக்கு தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது. மறுவிசாரணை இல்லை.**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு
படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்
கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.
ஒ/ம். திரு. வேடியப்பன்
முதன்மை சார்பு நீதிபதி,
**கரூர்.**